2023 ஏப்ரல் 5]

அந்த இடிபாடுகளை அகற்றுகின்றபோது அம்மணியம்மாள் மண்டபமும் சற்று சேதாரம் அடைந்திருக்கிறது. இதை மாண்புமிகு மாவட்ட அமைச்சர் அவர்களும், நானும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்றவுடன், அம்மணியம்மாளுக்கு ஏற்கெனவே இருந்ததைவிட சிறந்த முறையில் ஒரு மண்டபத்தை அங்கு அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, சிதிலமடைந்திருக்கின்ற அந்த மண்டபத்தை முழுவதுமாகப் புதிய மண்டபமாக. புதுப் பொலிவுடன், பார் உள்ளளவு, கடல்நீர் உள்ளளவு அம்மணியம்மாள் புகழ் இருக்கின்ற வகையில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் உத்தரவோடு அமைத்துத் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 109, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

109—

நூலகம் அமைத்தல்

***64844—திரு. ச. சிவகுமார்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், கம்மந்தூர் கிராமத்தில் நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) பொதுவாக இதுபோன்ற கேள்விகளுக்குப் பலமுறை நான் பதில் அளித்திருக்கின்றேன் என்று சொன்னாலும், தொடர்ந்து இதுபோன்ற கேள்விகள் கேட்கப்படும்போது

உள்ளபடியே மகிழ்ச்சியாக இருக்கின்றது. காரணம், நம்முடைய தமிழ்நாட்டின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஓர் அறிவுசார்ந்த சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்று எண்ணும்போது அதைத் தொடர்ந்து எழுப்பப்படுகின்ற கேள்வி. குறிப்பாக, இங்கே இருக்கின்ற பல சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய சட்டமன்றத் தொகுதி அலுவலகமாக இருந்தாலும் சரி, கட்சி அலுவலகமாக இருந்தாலும் சரி, ஏதோ ஒரு வகையில் சிறியதாக நூலகம் அமைக்க வேண்டுமென்பதை வழக்கமாக வைத்திருக்கின்றார்கள். அதற்கு என்னுடைய நன்றி. அதிலும் குறிப்பாக, நம்முடைய சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினர், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்கூட சமீபத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெயரில் நடமாடும் நூலகம் ஒன்றைத் திறந்து வைத்துள்ளார். (மேசையைத் தட்டும் ஒலி) இதுபோன்று, ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதத்தில் நூலகத்தை நடத்துவது என்பது உள்ளபடியே மகிழ்ச்சியாக இருக்கிறது.

விழுப்புரம் மாவட்டம், மயிலம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர், வல்லம் ஒன்றியம், கம்மந்தூர் கிராமத்தில் நூலகம் வேண்டுமென்று இந்த கேள்வியைக் கேட்டிருக்கிறார். பொதுவாக நூலகம் என்று சொல்லும்போது முதலில் பகுதிநேர நூலகம் அமைக்கப்பட வேண்டும். பிறகு அதன் பயன்பாடு, மக்கள், வாசகர் எண்ணிக்கையைச் சார்ந்து அது ஊர்ப்புற நூலகமாக மாறும்; பிறகு கிளை நூலகமாக மாறும்; பிறகு முழுநேர நூலகமாக மாறும். உறுப்பினர் வெறுமனே நூலகம் அமைக்கப்படுமா என்று கேட்டிருக்கின்றார். உறுப்பினர் அவர்கள் பகுதிநேர நூலகம் அமைக்கப்படுமா என்று கேட்கும்போது, நிச்சயமாக அதற்கான கருத்துரு பெறப்பட்டு அதை அமைக்கின்ற பணியில் நாங்கள் முழுமையாக ஈடுபடுவோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார் அவர்கள்.

திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலம் சட்டமன்றத் தொகுதி, வல்லம் ஒன்றியத்தில் கம்மந்தூர் ஊராட்சியைச் சுற்றியுள்ள, துடுப்பாக்கம், மொடையூர், கீழூர், மணியம்பட்டு, மேல்சேவூர் போன்ற கிராமங்களில் உயர்நிலைப்

2023 ஏப்ரல் 5]

பள்ளி, மேல்நிலைப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களும், பொதுமக்களும் கம்மந்தூர் ஊராட்சியில் நூலகம் அமைந்தால் பயன்பெறுவார்கள். அதுபோல, கம்மந்தூர் ஊராட்சி சுமார் 2,000 மக்கள் தொகைக் கொண்டது. கம்மந்தூர் ஊராட்சியும், அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள மாணவர்களும், பொதுமக்களும் பயன்பெறுவார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தற்போது புத்தகத் திருவிழா, நான் முதல்வன், இல்லம் தேடி கல்வி, காலை உணவு போன்ற திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்கள். மாணவர்களின் திறனை மேம்படுத்த தொடர்ந்து திட்டங்களைத் தீட்டுகின்ற மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

'ஒரு நூலகம் திறக்கப்படும்போது நூறு சிறைச்சாலைகள் மூடப்படுகின்றன' என்று சான்றோர் கூறியுள்ளனர். ஆகவே, அந்த கிராமத்தில் பகுதிநேர நூலகம் ஒன்று அமைத்துத் தருவார்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தக் கிராமத்தில் மொத்தம் 2 ஆயிரத்து 252 மக்கள் இருக்கின்றனர். கிட்டத்தட்ட 1,516 பேர் படித்தவர்கள் இருக்கின்றார்கள். குறிப்பாக, இதைப் பார்க்கும்போது, அங்கே படிக்காதவர்களையும் படிக்க வைக்க வேண்டுமென்பதற்காக* Non–formal education *மூலமாக கல்வியறிவைத் தருவதற்கும் நாங்கள் தயாராகியிருக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல், கிட்டத்தட்ட 4 கி.மீ., 6 கி.மீ., 8 கி.மீ., 9 கி.மீ., என சுற்றுவட்டாரங்களில் பார்த்தீர்களென்றால் தையூர், மொடையூர், வல்லம், அணிலாடி போன்ற பகுதிகளில் நூலகங்கள் இருக்கின்றன. குறிப்பாக, தொகுதியைச் சார்ந்து ஒட்டுமொத்தமாக 21 நூலகங்கள் இருக்கின்றன. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் பகுதிநேர நூலகம் அமைக்கப்படுமா என்று கோரிக்கை வைக்கும்போது, அதற்கான கருத்துரு பெறப்பட்டு பகுதிநேர நூலகம் அமைப்பதற்கான பணியில் நாங்கள் முழுமையாக ஈடுபடுவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார் அவர்கள்.

திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல், மயிலம் சட்டமன்றத் தொகுதியில் கூட்டேரிப்பட்டில் அரசு உயர்நிலைப் பள்ளி ஒன்று உள்ளது. அதை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தர வேண்டும். இந்தப் பள்ளி, 1934 ஆம் ஆண்டு மகாத்மா காந்தி அவர்களால் கமலா நேரு என்ற பெயரில் அடிக்கல் நாட்டப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று மூன்று அமைச்சர்கள், நான்கு மானியக் கோரிக்கைகள் உள்ளன. மாண்புமிகு உறுப்பினர் தரமுயர்த்தி தரப்படுமா என்று கேள்வியை மட்டும் கேட்டு அமருங்கள். நேரமில்லை.

திரு. ச. சிவகுமார்: அதேபோல், தீவனூர் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகவும், கொங்கரப்பட்டு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகவும் தரமுயர்த்தித் தருவார்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், 12 ஆயிரம் பகுதி நேர ஆசிரியர்கள், 12 ஆண்டுகளாக ரூ.10 ஆயிரம் சம்பளத்தில் பணிபுரிகின்றார்கள். அவர்கள் பணி நிரந்தரம் செய்யப்படுவார்களா என்பதையும் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மானியக் கோரிக்கையின்போது, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ் அவர்கள் கடந்த இரண்டு வருடங்களாகப் பள்ளிகள் தரம் உயர்த்தப்படவில்லை என்று தன்னுடைய வருத்தத்தைத் தெரிவித்திருந்தார். சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் திரு. தி. வேல்முருகன் அவர்களும் வருத்தத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். குறிப்பாக, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அண்ணன் திரு. தங்கம் தென்னரசு அவர்கள் பள்ளிக் கல்வித் துறை அமைச்சராக இருந்தபோது, ஒரு கிலோ மீட்டருக்குள் தொடக்கப் பள்ளி, 3 கிலோ மீட்டருக்குள் நடுநிலைப் பள்ளி, 5 கிலோ மீட்டருக்குள் உயர்நிலைப் பள்ளி,

2023 ஏப்ரல் 5]

8 கிலோ மீட்டருக்குள் மேல்நிலைப் பள்ளி என்ற அந்த radius, almost cover *செய்யப்பட்டுள்ளது.*

அவர்கள் காலத்தில் வருடாவருடம் 100 பள்ளிகளைத் தரம் உயர்த்துகின்ற அந்தப் பணி நடந்திருக்கிறது. இப்போது almost *பார்த்தால் பக்கத்தில் ஏதாவது ஒரு பள்ளியிருந்தால்* Aided school *இருந்தால்கூட, அதற்கான விதிமுறைகள் உட்பட்டு வரவில்லை என்று* Finance Department*–ல் பதில் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும்* special case *ஆக மாண்புமிகு உறுப்பினர் வேல்முருகன் அண்ணன் அவர்களாக இருந்தாலும் சரி, இப்போது கேட்டிருக்கின்ற நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் சிவகுமார் அண்ணன் அவர்களாக இருந்தாலும் சரி, அந்தப் பணிகளையெல்லாம் கண்டிப்பாகச் செய்து தருவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று நிதி நிலைமைக்கேற்ப–புதியதாகப் பள்ளியைத் தரம் உயர்த்தவேண்டுமென்று சொன்னால், அதற்கென்று சில* rules and regulations *இருக்கின்றன. நீங்களும் அதையே கேட்டிருக்கிறீர்கள். அதிகமான சட்டமன்ற உறுப்பினர்கள் கிட்டத்தட்ட 105 வெட்டுத் தீர்மானங்களை, பள்ளியைத் தரம் உயர்த்துவது பற்றி மட்டும்தான் கொடுத்திருந்தனர். கண்டிப்பாக* financial position*–க்குத் தகுந்தாற்போல் அவற்றைப் படிப்படியாகத் தரமுயர்த்துவோம் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 11–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர்* T.R.B. *ராஜா அவர்கள்.*

முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக நகராட்சி நிர்வாகத் துறைமூலம் பள்ளிக் கல்வித் துறைக்கு நூலக வரி செலுத்தப்பட்டு, அதன்மூலம் நாம் பல திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டு வருகிறோம். ஏறத்தாழ 25 ஆண்டுகளுக்கு முன்னர், எங்கள் பெருமை வாய்ந்த மன்னார்குடி நகராட்சியில், அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி ஆரம்பிப்பதற்காக, ஏறத்தாழ 2,19,593 சதுரடி நிலம் வழங்கப்பட்டது. இதற்கான மதிப்பு ஒரு சதுரடிக்கு ரூ.57.30 காசு என்று அப்போது மதிப்பிடப்பட்டு, ஒரு கோடியே 25 இலட்சத்து 82 ஆயிரத்து அறுநூற்று எழுபத்து ஒன்பது ரூபாய் பள்ளிக் கல்வித் துறை தர வேண்டும். இது படிப்படியாக ஏறத்தாழ 25 ஆண்டுக் காலம் கடந்து விட்டது. தற்போது பள்ளிக் கல்வித் துறை*

25 கோடியே 39 இலட்சத்து 49 ஆயிரத்து அறுநூற்று இருபத்து இரண்டு ரூபாய் 75 பைசா எங்களுக்கு தரவேண்டும். ஆனால், இன்றுவரை மன்னார்குடிக்கு கடன்பட்டதாகவே இந்தப் பள்ளிக் கல்வித் துறை இருந்து வருகிறது. நான் மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்டேன், என்ன செய்வதென்று. சரி, நீங்கள் நூலக வரியெல்லாம் கொடுத்துவிட்டீர்களா என்று கேட்டார். மன்னார்குடி ஏறத்தாழ 82 இலட்சத்து 53 ஆயிரம் ரூபாய் நூலக வரியாக, பள்ளிக் கல்வித் துறைக்கு கொடுக்க வேண்டும். அதில், ரூ.35 இலட்சம் கொடுத்துவிட்டோம். மீதமுள்ள 47 இலட்சத்து 53 ஆயிரம் ரூபாயை இன்னும் இரண்டு மாதங்களில் கொடுத்துவிடுவோம். ஆக, அதையும் நாங்கள் முழுமையாகக் கொடுத்துவிடுவோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு திட்டங்களை நமது மன்னார்குடி பகுதிக்கு அறிவித்திருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உங்களுக்கு என்ன வேண்டும்?*

முனைவர் T.R.B. ராஜா: *இன்னும் பல திட்டங்களை அறிவிப்பதற்கு எங்களுக்கு நிதி வேண்டும். அதனால், நகராட்சி நிர்வாகத் துறையிடம் இது பற்றி கேட்டதற்கு, ஏறத்தாழ 300 கோடி ரூபாய் நகராட்சி நிர்வாகத் துறையினர், பள்ளிக் கல்வித் துறைக்கு தரவேண்டுமென்று தெரிவித்து வருகிறார்கள். ஆனால், அதில் 90 கோடி ரூபாய் நாங்கள்* State Planning Commission *மூலமாக பெற்றுத் தந்துள்ளோம்.* Estimates Committee *சார்பாக எனது சொந்த* recommendation*-ம் அதில் இருக்கிறது. ஆக, மன்னார்குடி நகராட்சியிலிருந்து பள்ளிக் கல்வித் துறைக்கு 90 கோடி ரூபாய் இப்போது கொடுத்திருக்கிறோம். எனவே, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், மன்னார்குடிக்கு கடன்பட்டவராகவே இருப்பாரா அல்லது மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் அன்பில் மின்னுமா மன்னை என்று கேட்க விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அமைச்சர் அவர்கள். இவ்வளவு கடனில் இருப்பீர்கள் என்று தெரியாதே! எங்களுக்கு. இவ்வளவு பெரிய கடனில் இருப்பீர்கள் என்று எங்களுக்கு தெரியாதே!*

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கு சம்பந்தமில்லை என்று சொன்னாலும், நீங்கள் தொடர்ந்து*

2023 ஏப்ரல் 5]

அனுமதித்துக்கொண்டே இருக்கிறீர்கள். இருந்தாலும் அவர் எங்களுக்கு 50 இலட்சம் ரூபாய் தரவேண்டிய பாக்கியிருக்கிறது. Library Cess *மூலமாகத் தர வேண்டியிருக்கிறது. பரவாயில்லை, நாங்கள் அதைக் கழித்துக்கொள்கிறோம். இருந்தாலும் மீண்டும் நாங்கள்* financial approval*–க்கு சென்றால் அவர்கள்தான்* clear *செய்து தரவேண்டும். ஏற்கெனவே நகராட்சி நிர்வாகத் துறை சார்பில் ரூ.250 கோடி முதல் 300 கோடி ரூபாய் வரை* Library Cess *மட்டும் வரவேண்டியிருக்கிறது. அதில் இப்போது 150 கோடி ரூபாய் தனியாக* sanction *செய்திருக்கிறார்கள். ஏற்கெனவே* State Planning Commission*–ல் அவர் இருக்கிறார். அதிலிருந்து 90 கோடி ரூபாய் வழங்கியிருப்பதாக சொல்லியிருக்கிறார். அதற்கு ரொம்ப நன்றி. இதையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று அதிலிருந்து ஏதாவது* adjust *செய்ய முடியுமா என்று பார்த்துக்கொள்ளலாம். நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இந்தக் கேள்வியை நீங்கள் கேட்க சொன்னதால்தான், அவர் என்னிடத்தில் வந்து கேட்டு, அனுமதி வாங்கினார். (சிரிப்பு) மாண்புமிகு உறுப்பினர் கோவி. செழியன் அவர்கள்.*

முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூர் சட்டமன்றத் தொகுதியில் பல்லாண்டுகளாக நூலகம் செயல்பட்டு வருகிறது. கட்டடம் பாதிப்படைந்த நிலையில் இருக்கின்ற காரணத்தால் புத்தகங்களையெல்லாம் பாதுகாக்க முடியாமலும், வாசகர்கள் தங்கிப் படிக்க இயலாத நிலையும் இருக்கிறது. தாலுகா தலைநகராக, தொகுதியின் தலைநகராக, ஒன்றிய தலைநகராக, பேரூராட்சியின் தலைநகராக விளங்குகிற திருவிடைமருதூரில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நல்ல நூலகம் அமைத்துத்தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். அந்த நூலகத்தை* Digital *நூலகமாக, எப்படி மழலையர் பள்ளிகளுக்கு* Smart Class *தருகிறீர்களோ, குழந்தைகளுக்கே* Smart Class *தருகிற நீங்கள், படிக்கிற நூலகர்களுக்கு, பயனாளிகளுக்கு* Digital *நூலகமாகத் திருவிடைமருதூரில் அமைத்துத் தருவீர்களா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். அப்படி அமைத்துத் தரும்பட்சத்தில் மாணவர்கள் தங்கள் தேர்வுகளுக்குத் தேவையான குறிப்புகளை நகல் எடுப்பதற்கு, எங்களுடைய சொந்த செலவில் அதற்குரிய* Xerox machine

வாங்கித் தருகிறோம் எனச் சொல்லி, திருவிடைமருதூருக்கு Digital நூலகத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைத்துத் தருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

முற்பகல் 11–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்மைதான். மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா அவர்கள் சொல்வதுபோல, அந்தப் பகுதியில் நாங்களும் பள்ளி மாணவர்களைச் சந்தித்தபோது, பள்ளி மாணவர்களிடமிருந்து கோரிக்கைகளைப் பெற்றிருக்கிறோம்; அதேபோல, மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா அவர்களுடைய கோரிக்கையும் இருக்கிறது. நான் ஏற்கெனவே சொன்னதுபோல, ஒரு நூலகம் அமைப்பதற்கு 5 சென்ட் நிலத்தை அவர்கள் நூலகக் குழுவிற்கு வழங்க வேண்டுமென்ற நிபந்தனை இருக்கிறது. அதேபோல, இரண்டு புரவலர்களாக இருந்தால், ரூ.1,000/– பணம் செலுத்த வேண்டும், 200 உறுப்பினர்களாக இருந்தால், ஆண்டுச் சந்தாவாக ரூ.20/– வீதம் கட்டவேண்டும், தேவையான தளவாடப் பொருட்கள் இரண்டாயிரம் ரூபாய்க்கு வாங்கித் தரவேண்டும் என்கிற பல விதிமுறைகளுக்குட்பட்டு இருக்குமானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த நூலகம் நிச்சயம் அமைத்துத் தரப்படும். மேலும், Digitise செய்ய வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே நான் குறிப்பிட்டதைப்போல, Second phase–ல் 500 நூலகங்களுக்கான பணிகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன. அதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றபட்சத்தில், அந்தப் பணியும் செய்து தரப்படும் என்று தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி V. அமலு அவர்கள்.

திருமதி V. அமலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் தொகுதிக்குட்பட்ட பிச்சனூர் பகுதியில் மிகவும் பழமையான கங்காதரசுவாமி நகராட்சி நடுநிலைப்

2023 ஏப்ரல் 5]

பள்ளி இயங்கி வருகிறது. இப்பகுதி, நெசவாளர்கள் நிறைந்த பகுதியாகும். எனவே, இப்பள்ளியினை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு 2015 ஆம் ஆண்டு முன்வைப்புத் தொகையாக ரூ.1 இலட்சம் பொதுமக்களின் பங்களிப்பாகச் செலுத்தப்பட்டும், இதுநாள் வரையில் அப்பள்ளி தரம் உயர்த்தப்படவில்லை. இதனால் இப்பகுதி பெண்களின் இடைநிற்றல் விகிதம் சுமார் 40 சதவிகிதம், . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்தப்படுமா என்று கேட்கிறீர்கள், இல்லையா ?*

திருமதி V. அமலு: *நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்தப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, முன்வைப்புத் தொகை ரூ.1 இலட்சம், ரூ.2 இலட்சம் செலுத்தி, 5, 6, 7 வருடங்கள் கழிந்தும், நிலுவையிலுள்ளன எனக் குறிப்பிட்டு, பல சட்டமன்ற உறுப்பினர்கள் கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போலத்தான்,* financial implications*–ஐப் பொறுத்து, சாத்தியக்கூறுகள் ஏற்படும்பொழுது,* special case *ஆக எடுத்துக்கொள்ளப்படும். ஏனென்றால், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர், முன்னாள் அமைச்சர் அண்ணன் திரு. கே.பி. முனுசாமி அவர்களும்கூட மலைவாழ் மக்கள் வசிக்கும் பகுதிகளில்* special case *ஆக எடுத்துக்கொண்டு, முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுள்ளார்கள்.*

அந்த வகையில், special case *ஆக* consider *செய்து,* atleast *அந்த இனங்களில் ஒரு சில* cases*–க்கு முன்னுரிமை வழங்க முடியுமா என்று ஆராய்ந்து, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ஜெயக்குமார் அவர்கள்.*

திரு. S. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருந்துறை தொகுதி, கருமாண்டிசெல்லிப்பாளையம் பேரூராட்சி, சிறப்புநிலைப் பேரூராட்சியாகத் தற்போது தரமுயர்த்தப்பட்டுள்ளது. இங்கு செயல்பட்டு வந்த நூலகக் கட்டடம் கடந்த சில ஆண்டுகளாக மிகவும் பழுதடைந்துள்ள நிலையில் இருப்பதால், அருகிலுள்ள பெருந்துறை பேரூராட்சியில் கருமாண்டிசெல்லிப்பாளையம் நூலகக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. அந்தக் கட்டடத்தை அகற்றி, அதே இடத்தில், மீண்டும் கருமாண்டிசெல்லிப்பாளையம் பேரூராட்சியிலேயே இந்த நூலகக் கட்டடத்தை அமைத்துத் தருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட நூலகர்கள் சார்பாக அது தொடர்பான கருத்துருக்கள் கேட்கப்பட்டு, அங்கு எத்தனை உறுப்பினர்கள் இருக்கிறார்கள், எத்தனை புத்தகங்கள் இருக்கின்றன என்பனவற்றையெல்லாம் கருத்தில்கொண்டு, தேவைப்படும்பட்சத்தில், அதே இடத்தில் புதிதாக நூலகம் கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 110, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரூபி ஆர். மனோகரன், மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள்.*

110—

புத்தாக்கப் பயிற்சி

***4265—திரு. ரூபி ஆர். மனோகரன்:**

மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, நாங்குநேரியில் இராணுவத்தில் சேரும் இளைஞர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க புத்தாக்கப் பயிற்சி அளிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?